

மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. சார்பில் எல்லோருக்கும் எல்லாம் திராவிட மாடல் ஆட்சி நடத்தும் கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா மற்றும் அரசின் நிதிநிலை அறிக்கை விளக்க பொதுக்கூட்டம் மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., தலைமையில் நடைபெற்றதில் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில செயலாளர் தயாநிதிமாறன் எம்.பி., சிறப்புரையாற்றினார். உடன் கழக நிர்வாகிகள் பொன் முத்துராமலிங்கம், வ.வேலுசாமி, பெ.குழந்தைவேலு, எஸ்.எஸ்.மாறன், ம. ஒச்சுபாலு, மா.ஜெயராமன், மேயர் இந்திராணி பொன் வசந்த், சி.சின்னம்மாள், பி.டி.மணிமாறன், வைகை பரமன், முத்து கணேசன், ராஜா, தனசெல்வம், மூவேந்திரன், முருகவேல், அக்ரி கணேசன், ஆர்.கணேசன், பாக்கியநாதன், வீரகணேசன், சௌந்தரராஜன் மற்றும் திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர் பொதுமக்கள் உள்ளனர்

# வேலூரில் தி.மு.க. பட்ஜெட் விளக்கப் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யா மொழி சிறப்புரை!

வேலூர், மார்ச் 4 -

வேலூர் மாநகர தி.மு.க. மற்றும் வேலூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வதுபிறந்த நாளை முன்னிட்டு 'எல்லாருக்கும் எல்லாம்'என்ற தலைப்பில் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் அண்ணா கலையரங்கம் அருகே நடந்தது. கூட்டத்துக்கு வேலூர் மாவட்டதி.மு.க செயலாளர் ஏ.பி. நந்தகுமார் எம்.எல்.ஏ தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ நாடாளுமன்ற உறுப்பினர்

டி .எம் .கதிர் ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி மேயர்சுஜாதா ஆனந்தகுமார்,துணை மேயர் எம். சுனில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அவர் பேசியதாவது:

தமிழகத்தில் மகளிருக்கான இலவச பஸ் பயணம் மூலம் பெண்கள் மாதம் ரூ. 800 முதல் ரூ.900 வரை சேமிக்கிறார்கள் என்று ஒரு ஆய்வு அறிக்கை கூறுகிறது. ஆனால் ரூ.400ல் இருந்த சமையல் எரிவாயு சிலிண்டர் விலைரூ 1,200 ஆக உயர்த்தி ரூபாய் 800ஐ உங்களிடம் இருந்து எடுத்தவர் மோடி.

நாங்கள் அமைச்சர்கள், மேயர்கள், எம்.எல்.ஏக்கள் அல்ல, உங்களுக்காக வேலை செய்யும் பணியாளர்கள் .மத்தியில் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்த பின்னர் பெட்ரோல், டீசல் சமையல் எரிவாயு, உட்பட அனைத்து பொருட்களின் விலையும் உயர்ந்துள்ளது .விலைவாசியை கட்டுக்குள் கொண்டு வருவோம் என்று தேர்தலுக்கு முன்பு பிரதமர் மோடி கூறினார். ஆனால் இன்றைக்கு அதன் நிலை அனைவருக்கும் தெரியும். பிரதமர் மோடி போர் தொடுப்பது போல, அடிக்கடி தமிழ்நாட்டுக்கு வருகிறார் .

மற்ற மாநிலங்களைப் போல் தமிழகத்தை பார்க்காதீர்கள், மதத்தின் பெயரால் நீங்கள் வேறுபடுத்தி பார்க்கிறீர்கள். ஆனால் நாங்கள் மொழியால் அனைவரையும் ஒன்றுபடுத்தி பார்க்கிறோம். வெள்ளம் பாதித்த போதும் ,புயல் தாக்கி சேதம் அடைந்த போதும் ,மோடி தமிழகம் வரவில்லை .

நீட்டுக்காக 22 மாணவர்கள் உயிரிழந்த போதும், பல்வேறு போராட்டத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் உயிரிழந்த போதும் ,

ஏன் நாடாளுமன்றத்தில் கேள்வி நேரத்திற்கு வராத மோடி தற்போது அடிக்கடி தமிழகம் வருகிறார். அதற்கு காரணம் நாடாளுமன்ற தேர்தல் பயம் தான்.

பிரதமர் மோடியின் பார்வை தமிழகத்தின் மீது எந்த மாதிரி உள்ளது என்றால் , ஒரு ரூபாயை வாங்கிக் கொண்டு 26 பைசா தான் கொடுக்கிறார்கள் . மத்திய அரசு மிரட்டினால் தி.மு.க பயப்படாது. நாடாளுமன்ற தேர்தல் வெற்றி நம்மை நோக்கி வந்து கொண்டிருக்கிறது.

20, 23ம் ஆண்டு கர்நாடகா, தெலுங்கானா, மிசோரம், சட்டமன்ற தேர்தலில் தோல்வி அடைந்தது, போன்று 2024 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் பாஜக தோல்வி அடையும். வாக்கு சீட்டு மூலமாக ஒரு ஜனநாயக புரட்சியை மக்கள் ஏற்படுத்த தயாராக இருக்கிறார்கள். வருகிற நாடாளுமன்ற தேர்தல் வெறும் தேர்தல் அல்ல, நாட்டை காக்க கூடிய போர்.

இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் மு.பாபு, துணை பொதுக் குழு உறுப்பினர்கள் வி. தயாநிதி, எஸ்.கதிரேசன், மாநகர துணை செயலாளர்கள் தங்கமணி ஆனந்தன், ஏ.ஆர்.முன்னா ஷெரீப், ஏ.தேவநேசன், பகுதி செயலாளர்கள் ஆர்.பி.இ சசிகுமார், எம்.ஏ.கணேஷ் சங்கர், வி.ஜி.கே சுந்தரவிஜி , ஆர்.பாலமுரளி கிருஷ்ணா,

சி .எம். தங்கதுரை, ஆர். கே. ஐயப்பன், முருக பெருமாள், மாநில கொள்கை பரப்பு துணைச் செயலாளர் ஜி .ரமேஷ், மாநில சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு துணைச் செயலாளர் எம்.நூருல்லா, மாநில மருத்துவர் அணி துணை அமைப்பாளர் டாக்டர் ராஜேஸ்வரி மோகன் காந்தி, அரசு வழக்கறிஞர் என். ராஜா, கலை இலக்கிய பிரிவு உமா சந்திரன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



விருதுநகரில் கழகத் தலைவரின் அறிவிப்பின்படி எல்லோருக்கும் எல்லாம் மாபெரும் பொதுக்கூட்டம் நகர மன்றத் தலைவர் எஸ்.ஆர். எஸ்.ஆர்.மாதவன் தலைமையில் நடைபெற்றது. வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் தலைமை கழகப் பேச்சாளர் சைதை சாதிக் சிறப்புரை ஆற்றினர். உடன் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன், ஒன்றிய சேர்மன் சுமதி ராஜசேகர், செயற்குழு உறுப்பினர் சேர்மன் சுப்பாராஜா, நகர தி.மு.க. செயலாளர் எஸ்.ஆர்.எஸ்.தனபாலன், விளையாட்டு மேம்பாட்டு அணி கே.ஜி.ராஜகுரு, வடக்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆர்.கிருஷ்ணகுமார், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.பி.மதியழகன், எஸ்.சுதாகர், நகர துணைச் செயலாளர் ஏ.எஸ்.கே.ரமேஷ் குமார், மாவட்ட விவசாய அணி நேஷனல் ராமர், அமைப்பு சாரா ஓட்டுனர் அணி எல்.திருமாறன் ஆகியோர் உள்ளனர்.

# பாட்னாவில் "இந்தியா" கூட்டணியின் பொதுக்கூட்டம்!

## ராகுல் காந்தி, லாலு பிரசாத் உள்ளிட்ட தலைவர்கள் பங்கேற்பு!

பாட்னா, மார்ச் 4 -

பீகார் தலைநகர் பாட்னாவில் இந்தியா கூட்டணியின் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் ராகுல் காந்தி - லாலு பிரசாத் யாதவ் - தலைவர்கள் பங்கேற்றனர்.

மக்களவைத் தேர்தலில் பா.ஜ.க.வுக்கு எதிராக "இந்தியா" எனும் பெயரில் கூட்டணி அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியா கூட்டணியில் காங்கிரஸ், தி.மு.க., சரத்பவாரின் தேசியவாத காங்கிரஸ், உத்தவ் தாக்கரேவின் சிவசேனா, ஆம் ஆத்மி, சமாஜ்வாதி, இடதுசாரிகள் உள்ளிட்ட கட்சிகள் இடம் பெற்றுள்ளன.

இக்கூட்டணியில், டெல்லி உள்ளிட்ட 5 மாநிலங்களில் ஆம் ஆத்மி கட்சி, காங்கிரஸ் இடையே வெற்றிகரமாக தொகுதி உடன்பாடு அறிவிக்கப்பட்டது.

இதேபோல உத்தரப்பிரதேசத்திலும் சமாஜ்வாதி கட்சி காங்கிரஸ் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டது.

தமிழ்நாட்டில் தி.மு.க. காங்கிரஸ் இடையே தொடர்ந்து தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை சுமூகமாக நடைபெற்று வருகிறது.

ஜம்மு காஷ்மீரிலும் தேசிய மாநாட்டு கட்சி மக்கள் ஜனநாயகக் கட்சி காங்கிரஸ் இடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டது.

48 லோக்சபா தொகுதிகளைக் கொண்ட மகாராஷ்டிராவிலும் "இந்தியா" கூட்டணி கட்சிகளிடையே தொகுதி உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், பீகார் தலைநகர் பாட்னாவில் இந்தியா கூட்டணியின் பொதுக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

காங்கிரஸ் முன்னணித் தலைவர் ராகுல் காந்தி, பீகார் முன்னாள் முதல்வர் லாலு பிரசாத் யாதவ், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி பொதுச் செயலாளர் சீதாராம் யெச்சூரி, இந்திய கம்யூனிஸ்ட் பொதுச் செயலாளர் டி.ராஜா உள்ளிட்டவர்கள் இக்கூட்டத்தில் பங்கேற்று சிறப்பித்தனர்.

## 'திராவிட மாடல்' நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

### தலைமைக் கழக அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| வால்பாறை நகரம் | : | திருமதி. சேலம் சுஜாதா |
| தாரமங்கலம் நகரம் | : | கரூர் முரளி |
| சீர்காழி நகரம் | : | திருமதி. புதுக்கோட்டை விஜயா |
| திருவில்லிப்புத்தூர் நகரம் | : | திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி |
| ஆரணி நகரம் | : | வி.பி. கலைராஜன் |
| கம்பம் நகரம் | : | வே.மதிமாறன் |
| குமாரப்பாளையம்நகரம் | : | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| பல்லடம் நகரம் | : | தக்கோலம் தேவபாலன் |
| காரைக்குடி நகரம் | : | சென்னை அரங்கநாதன் |
| உடுமலைப்பேட்டை நகரம் | : | கு. கருணாநிதி |
| அம்பாசமுத்திரம் நகரம் | : | மதுரை எஸ். பாலா |
| கொல்லங்கோடு நகரம் | : | திருமதி. பவானி ராஜேந்திரன் |
| ஆவடி மாநகரம் | : | திண்டுக்கல் ஐ. லியோனி |
| பவானி நகரம் | : | ஒப்பிலாமணி, பொன்னேரி சிவா |
| கடையநல்லூர் நகரம் | : | நாஞ்சில் சம்பத் |
| அரக்கோணம் நகரம் | : | தமிழன் பிரசன்னா |
| ஆத்தூர் நகரம் | : | சூர்யாவெற்றிகொண்டான் |
| இராமேஸ்வரம் நகரம் | : | சைதை சாதிக் |
| பட்டுக்கோட்டை நகரம் | : | கா.அமுதரசன் |
| திருப்பூர் மாநகரம் | : | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| உசிலம்பட்டி நகரம் | : | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| தூத்துக்குடி மாநகரம் | : | இரா. ராஜீவ்காந்தி |
| கண்டோன்மெண்ட் நகரம் | : | இ.பரந்தாமன் |
| கோட்டகுப்பம் நகரம் | : | ஆ. கிருஷ்ணசாமி |
| ஜோலார்பேட்டை நகரம் | : | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| கூடலூர்நகரம்(கோவை) | : | கோவை செல்வராஜ் |
| கூடலூர் நகரம் (நீலகிரி) | : | வி.சி.சந்திரகுமார் |
| முசிறி நகரம் | : | கடலூர் இள. புகழேந்தி |
| பள்ளப்பட்டி நகரம் | : | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பரமக்குடி நகரம் | : | வி.பி. இராசன் |
| குழித்துறை நகரம் | : | சௌமியன் |
| குன்னூர் நகரம் | : | சித்திக் |
| பொள்ளாச்சி நகரம் | : | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

### வேலூர் - சத்துவாச்சாரியில் மார்ச் 6 - அன்று நடைபெறுகிறது!

# "கவிக்கோ" விருது விழா!

## கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு - 'கவிக்கோ விருது! வழங்கப்படுகிறது!

வேலூர், மார்ச் 4 -

வேலூரில், மார்ச் 6 அன்று நடைபெறும் 'கவிக்கோ விருது விழா" வில் 2022 ஆம் ஆண்டுக்கான "கவிக்கோ விருது" கவிஞர் நெல்லை ஜெயந்தாவுக்கு வழங்கப்படுகிறது.

அதன் விபரம் வருமாறு:

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்களுக்கு 19.07.1998 அன்று சென்னை ராஜாஜி அரங்கில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுடைய தலைமையில் நிகழ்ந்த மணிவிழாவின்போது அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத் தொகையிலிருந்து 22.01.1999 அன்று "கவிக்கோ அப்துல் ரகுமான் அறக் கட்டளை" நிறுவப்பட்டு 2014 ஆண்டு வரை ஆண்டுதோறும் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிஞருக்கு விருதாக ரூ.30,000 வழங்கப்பட்டு வந்தது.

26.10.2015 மற்றும் 27.10.2015 ல் சென்னை காமராசர் அரங்கில் நடைபெற்ற "கவிக்கோ பவள விழா"வில் அவருக்கு அளிக்கப்பட்ட அன்பளிப்புத் தொகை கவிக்கோ அப்துல் ரகுமான் அறக்கட்டளையில் சேர்க்கப்பட்டு, எதிர் வரும் ஒவ்வொரு ஆண்டும் தேர்ந்தெடுக்கப்படும் கவிஞருக்கு ரூ.1,00,000 வழங்கப்படுவது என தீர்மானிக்கப்பட்டு 2022 ஆம் ஆண்டுக்கான 'கவிக்கோ விருது" நெல்லை ஜெயந்தாவுக்கு வழங்கப்படுகிறது.

மேலும், வேலூர் மற்றும் திருப்பத்தூர் மாவட்ட அளவில் ஆண்டு தோறும் மாணவர்களுக்கு கவிதைப் போட்டி நடத்தி தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த மாணவருக்கு ரூ.10,000 வழங்கப்படுகிறது.

இவ்விழா - 6.3.2024 - புதன்கிழமை மாலை 6.00 மணி அளவில் வேலூர் - சத்துவாச்சாரி - சோலை அரங்கில் நடைபெறுகிறது.

இவ்விழாவிற்கு - 'தமிழியக்கம்' பொருளாளர் வே.பதுமனார் தலைமை வகிக்கிறார்.

கவிக்கோ அறக்கட்டளையின் பொருளாளர் வெ.சோலைநாதன் வரவேற்றுப் பேசுகிறார்.

டாக்டர் அ.அஜீம் - விருந்தினர்களுக்கு சிறப்புச் செய்கிறார்.

ஆ.மா.ஜெகதீசன் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்த கவிக்கோ அவர்களின் 'ஆலாபனை' நூல் வெளியீடு நடைபெறுகிறது.

வீ.ஐ.டி. வேந்தர் முனைவர் கோ.விசுவநாதன் நூலினை வெளியிட்டு, கவிக்கோ விருது, பட்டயம், பொற்கிழி வழங்குகிறார்.

பேராசிரியர் முனைவர் கு.வணங்காமுடி, மு. சுகுமார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

அ.அயாஸ் பாஷா நன்றி கூறுகிறார்.

தி.மு.அப்துல்காதர் பாராட்டுரை வழங்குகிறார்.

பேராசிரியர் - முனைவர் கி.பார்த்திபராஜா சிறப்புரையாற்றுகிறார்.

கவிஞர் நெல்லை ஜெயந்தா ஏற்புரையாற்றுகிறார்.

எஸ்.எஸ்.ஷாஜகான் நன்றி கூறுகிறார்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ப.சீ. கிருஷ்ணசாமி

### மார்ச் 4 (2001)



பெரியார் மாவட்டக் கழக பொறுப்பாளர்களில் ஒருவராகவும், பவானி நகரக் கழக செயலாளராகவும் தொடர்ந்து 25 ஆண்டுகள் பணியாற்றியவர்.

ஈரோடு மாவட்ட கூட்டுறவு ஒன்றியத் தலைவராகவும், நகர வங்கித் தலைவராகவும் பணியாற்றியவர்.

மொழிப்போர் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

"உயிர் கொள்கைக்கு உடல் மண்ணிற்கு என்று நீ கொண்டிருந்த உறுதியும், எதற்கும் கலங்காத உன் உள்ளமும் என் நினைவிலிருந்து என்றைக்கும் மறையாது!" எனத் தலைவர் கலைஞரால் புகழப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.


**கோயம்புத்தூர் மாநகராட்சி**

பொறியியல் பிரிவு
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
மின்னணு ஒப்பந்தப்புள்ளி (e-tendering)

ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.(e)21/2024 நாள் : 01.03.2024

| வ.எண். | பணியின் விபரம் | மொத்த பணிகளின் எண்ணிக்கை | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | ஒப்பந்தப்புள்ளி இணையதளம் மூலம் திறக்கும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி 5 மண்டலங்களிலுள்ள வார்டு பகுதிகளுக்குட்பட்ட பழுதடைந்த சாலைகளுக்கு தார் ஒட்டுப் போடுதல் | 5 பணி | 11.03.2024 பிற்பகல் 3.00 மணி (As per the Server Clock) | 12.03.2024 மாலை 4.00 மணி (As per the Server Clock) |

மேலும் முழு விபரங்களுக்கு கீழ்கண்ட இணையதள முகவரி மூலம் தெரிந்து கொள்ளலாம். https://tntenders.gov.in ஆணையர், கோயம்புத்தூர் மாநகராட்சி, பெரிய கடை வீதி, டவுன்ஹால், கோயம்புத்தூர் - 1. தொலைபேசி எண். 0422 2396026. Email : commr.coimbatore@tn.gov.in

ஆணையாளர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி

வெ.ஆ.எண். 185/செ.ம.தொ.அ/கோவை/நாள் : 02.03.2024




வேலூர் மாநகர தி.மு.க. மற்றும் வேலூர் சட்டமன்றத் தொகுதி சார்பில் தமிழ்நாடு முதலமைச்சரும், தி.மு.க. தலைவருமான தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் 71வதுபிறந்த நாளை முன்னிட்டு 'எல்லாருக்கும் எல்லாம்' என்ற தலைப்பில் பட்ஜெட் விளக்க பொதுக்கூட்டம் அண்ணா கலையரங்கம் அருகே நடந்தது. கூட்டத்துக்கு வேலூர் மாவட்ட தி.மு.க செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ. தலைமை தாங்கினார். மாவட்ட அவைத் தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ. நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம். கதிர் ஆனந்த், மாவட்டப் பொருளாளர் சி.நரசிம்மன், மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், துணை மேயர் எம். சுனில் குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.